Regd. No. M. 4593.

தனிப்பிரதி விலை { உள்நாடு 0-1-0, பர்மா, மலேயா, 0-1-6 (6-காசு

# குடி அரசு

Estd 1924.

பக்கங்கள் 8. சனி வெளியீடு. வருட சந்தா { உள்நாடு ரூ. 5-0-0, வெளிநாடு ரூ. 7-0-0

மாலை 20 } ஈரோடு 15 3-1947 பங்குனி மீ 2உ. { மலர் 23

# கார்ல் மார்க்ஸ் வாழ்க்கை வரலாறு

(8-3-47 குடி அரசின் தொடர்ச்சி)

இதன் பயனாக 1865, 1866 ஆகிய வருடங்களில் உருப்படியான ஸ்தாபனம் ஒன்றும் தோன்றவேயில்லை. சர்வதேசிய சங்கத்தைச் சேர்ந்த சங்கங்கள் பிரான்சிலும், லும், ஸ்விட்ஜர்லாந்திலும் காணப்பட்டன. பிரிட்டிஷ் டிரேட் யூனியன்கள் தனித்தனியாக ஒன்று சேர்ந்திருந்தன. ஜெர்மனியிலிருந்த தொழிலாளர் இயக்கம் லாசேல் ஆதிக்கத்திலிருந்து வந்தது அப்போது ஆங்காங்கிருந்த தொழிலாளர் ஸ்தாபனங்கள் எல்லாம் சர்வதேசிய சங்கம் அமைப்பதைக்குறித்துச் சிந்தித்துக்கொண்டு வந்தன. அந்த எண்ணம் மறைந்துவிடவில்லை. மார்க்ஸ் எந்த நடவடிக்கைகளிலும் பிரதான பங்கு கொள்ளவில்லை. பிரிட்டிஷ் டிரேட் யூனியன்களைச் சேர்ந்தவர்கள் தங்களுடைய கொள்கை ஐரோப்பா கண்ட முழுவதும் பரவவேண்டும் என்று கருதினார்கள். பிரான்சித் தொழிலாளர்கள் ப்ரௌடன் எண்ணம், திட்டம் பரவவேண்டும் என ஆசைப்பட்டனர். ஸ்வீடன் தேசத்தார்களது எண்ணம் விளக்கப்படாமலிருந்தது.

1866ல் உண்மையான பிரதிநிதிகளைக்கொண்ட ஒரு மகாநாடு செப்டம்பர் மாதம் ஜினிவாவில் கூடியது. இந்தக் கூட்டம்தான் முதலாளிகளுக்கும் தொழிலாளிகளுக்கும் பெரிய கலகத்தை யுண்டுபண்ணியது. தொழிலாளிகளின் உண்மையான இம்மகாநாட்டின் நடவடிக்கைகள் எதிர்பாராத கிளர்ச்சியை உண்டுபண்ணிவிட்டன.

இதுவரை வாயில்லாப் பூச்சிகள் போல முதலாளிகள் இட்டதே சட்டம் என நடந்துவந்த மக்கள் நிமிர்ந்து நடக்கவும் பேசவும் யோசிக்கவும் துணிந்துவிட்டார்கள். சிறிது இரக்கமுள்ள முதலாளிகள் இது சிறுபிள்ளைத் தனமான காரணமென நகைத்தார்கள். ஈவு இரக்கமற்றவர்கள் சீற்றமுற்றார்கள். இம்மகாநாட்டின் செய்தியைக் கேள்வியுற்று தொழிலாளர்கள் பூரிப்படைந்தார்கள். அதன் நடவடிக்கைகளைப்பற்றிக் கவலைப்படவில்லை. அது உயிருடனிருப்பதைக் குறித்துத்தான் மகிழ்ந்தார்கள். இதன் நடவடிக்கைகள் அநேகமாகப் பொருளாதாரம், அரசியல் முதலிய பிரச்சினைகளில் ப்ரௌடன் திட்டத்தையே ஒத்திருந்தது. இதுவரை தேய்ந்துகொண்டே வந்த சர்வதேசிய தொழிலாளர் சங்கம் மீண்டும் இதுமுதல் விருத்தியடையலாயிற்று. அங்கத்தினர்களின் தொகை பெருகலாயிற்று. பிரிட்டிஷ் டிரேட் யூனியன்களும் இதில் சேர்ந்தன. சர்வதேச சங்கத் தலைமையின் கீழ் பிரான்சுத் தொழிலாளர்கள் சங்கங்கள் கண்டார்கள். பெல்ஜியத்திலும் பெரிய பெரிய சங்கங்கள் உண்டாயிற்று. ஜர்மனி, அமெரிக்கா முதலிய நாடுகளுடன் கடிதப் போக்குவரத்து நடந்துவரலாயிற்று. வேலை நிறுத்தக்காரர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கப்பட்டது. தொழிலாளர்களின் வேலைநிறுத்தங்களுக்குச் சர்வதேச சங்கத்தின் மூலமாக பண உதவி செய்யப்பட்டு வந்தது.

இந்த இயக்கம் வரவர விருத்தியடையலாயிற்று. இதன் வளர்ச்சியைக்கண்டு மார்க்ஸ் உள்ளம் பூரித்தது. "இப்பொழுது காரியங்கள் வெகு அனுகூலமாக நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அடுத்த புரட்சியின்போது நமது கையில் வலிமை பொருந்திய இயந்திரம் இருக்கிறது" என்று 1866ல் எஞ்சல்ஸுக்குத் தெரிவித்தார். இந்த எண்ணத்தை 1867ல் லாசேனில் கூடிய இரண்டாவது மகாநாடு உறுதிப்படுத்திவிட்டது. சிக்கலும் மூர்க்கமு

மான பிரச்சினைகள் விளக்கப்பட்டன. மார்க்ஸின் கொள்கை பெரும்பாலர்களால் ஒப்புக்கொள்ளப்பட்டது; மகாநாட்டில் அறிஞர்களால் விளக்கப்பட்டது. லண்டனில் கூடிய ஜனரல் கௌன்ஸிலிலிருந்து மார்க்ஸ் பிரதான புருஷராய் விளங்கினார். ஒவ்வொரு மாதமும் சர்வ தேசிய சங்கம் வளர்ச்சியடைவதையும், அங்கத்தினர்கள் பெருகுவதையும் மார்க்ஸ் மிக மகிழ்ச்சியுடன் கண்டு களித்து வந்தார். இந்த இரு மகாநாடுகளிலும் விளக்கப்பட்ட புதிய கோட்பாடுகளை-தத்துவங்களைத் தொழிலாளர் போர்தொடுக்கச் செய்வதே என எங்கும் உணரலாயிற்று. ஆகவே இந்த இயக்கம் விரும்பத்தக்கதுதானா? இதனால் தொழிலாளர்களுக்குப் பயனுண்டா? அவர்களது வெற்றிக்கு இவைகள் உதவியளிக்குமா? என்பன போன்றவைகளைக் குறித்து மக்கள் சிந்திக்கலாயினர். பெல்ஜியத்தில் ஏற்பட்ட வகுப்புப் போராட்டம் இந்த இயக்கத்தின் அங்கத்தினர்களைப் பெருக்கிற்று. ஜர்மனியில் நடைபெற்றுக்கொண்டுவந்த யூனியன்களும் இதில் சேர்ந்தன. பிரிந்திருந்த ஆஸ்திரியாவும் இதனுடன் சேரலாயிற்று. பாரிஸிலுள்ள மத்தியஸ்தாபனத்தைப் போலீசார் கலைத்துவிட்டாலும் பிரான்ஸ் தேசமெங்கும் அச் சங்கங்கள் பரவிக்கிடந்தன.

1768ல் பிரஸ்ஸல்ஸில் நடந்த மகாநாட்டிலும் மார்க்ஸ் வெற்றி பெற்றார். அக்காலில் பிரௌடன் மாண்டுவிட்டாலும் அவரது கொள்கையைப் பின்பற்றி வந்த பல பிரஞ்சு பிரதிநிதிகள் மகாநாட்டில் தங்கள் கொள்கையை வாதித்தார்கள். வகுப்புப் போரையும், புதிய சோஷியலிஸ்ட் திட்டத்தையும், கோட்பாடுகளையும் அடியோடு எதிர்ப்பது என அப் பிரதிநிதிகள் கங்கணம் கட்டிக்கொண்டார்கள். அதன்படியே எல்லா ஸ்தாவர சொத்துக்களும் போக்குவரத்துச் சாதனங்களும் தொழிலாளர் கையிலே-ஆதிக்கத்திலே யிருத்தல் வேண்டும் என்ற தீர்மானம் பிரேரேபிக்கப் பட்டபொழுது அதை எதிர்த்த இவர்கள், விவசாயிகள், சொத்துரிமை, குடிசைத்தொழில், குறைந்த வட்டிக்குப் பண உதவியளித்தல் என்ற தீர்மானங்களைக் கொண்டுவந்தார்கள். ஆனால் இவர்களுடைய தீர்மானம் 30-க்கு 4 ஓட்டுகளால் தோற்கடிக்கப்பட்டது.

இந்த மகாநாட்டுக்குப் பின்னால் பிரிட்டிஷ் டிரேட் யூனியன்கள் தளர்ச்சியுற்றதாகக் காணப்பட்டாலும் மார்க்ஸ் தன்வசம் ஒரு பலமான ஸ்தாபனம் இருப்பதாகவே கருதிவந்தார். ஜர்மன் மெம்பர்கள் மட்டும் 10000. ஹாலந்திலிருந்தும் ஸ்பெயினிலிருந்தும் பலர் சேர்ந்தனர். நேபில்ஸ் சமஷ்டி டிபேட் கமிட்டிக்குப் பின் இத்தாலியிலும் இந்த ஸ்தாபனங்கள் காணலாயின. டிரேட் யூனியன் ஸ்தாபனத்தின் நேஷனல் லேபர் யூனியன் 800000 மெம்பர்களைச் சேர்த்திருப்பதாகத் தெரிவித்தார்கள். 1869ல் பிரேசில் கூடிய மகாநாட்டில் இந்த இயக்கத்தின் வளர்ச்சி எதிரொலிக்கப்பட்டது. இம் மகாநாட்டில் விவாதம் வெகு மும்முரமாக நடந்தது. பிரௌடன் கொள்கை மீண்டும் இம் மகாநாட்டில் தலையெடுக்க ஆரம்பித்தது. வாய்ப்போர் உண்டாயிற்று எப்படியிருந்தபோதிலும் பிரௌடன் கொள்கை 54க்கு 4 ஓட்டுகளால் தோற்கடிக்கப்பட்டது. இச்செய்தி ஹாலந்து, டென்மார்க், ஸ்பெயின் இத்தாலி முதலிய இடங்களில் பரவலாயிற்று. சர்வ தேசிய ஸ்தாபனம் அங்கும் வளர்ச்சியடையலாயிற்று.

இதில் சேர்ந்த மெம்பர்களின் தொகை பத்திரிகைகளின் மூலமாகச் சர்வதேசியச் சங்கத்துக்குத் தெரிவிக்கப்பட்டு வந்தது. சீனாவில் பத்து லட்சக்கணக்கான பேர் அடங்கிய ஒரு இரகசிய ஸ்தாபனத்தை வளர்த்துவந்தார்கள்.

இவ்வளவு வெற்றிகளுக்கிடையே ஆங்காங்கு இடையூறுகளும் கஷ்டங்களும் பல தோன்றின. ஸ்விட்சர்லாந்திலுள்ள மெம்பர்களில் ஒருவர் ரஷ்யர். அவர் பெயர் மைக்கேல் பாகுனின். அவர் ஒரு கோபி, அராஜகவாதி. இவரை வெல்வது மார்க்ஸுக்கு மிகக் கஷ்டமாயிருந்தது. மார்க்ஸுக்கும் இவருக்கும் பெரிய தகராறு

(தொடர்ச்சி 8-பக்கம்)

வெளிவந்து விட்டது! விற்பனைக்குத் தயார்!!

தமிழர் போர் முழக்கம்

(இயற்றியது பாவலர் பாலசுந்தரம்)

விலை 4-அணா: வியாபாரிகட்கு 3-அணா

பெரியார் ஈ. வெ. ரா., N. S கிருஷ்ணன், N. அர்ச்சுனன்
ஆகியோரைப் பற்றியும்,
மற்றும் பல அறிவியக்கப் பாடல்களுடன், பெரியாரின் அழகிய
அட்டைப்படத்தோடு அமைந்தது
சினிமா மெட்டுகளில் அமைந்துள்ள எளிய இனிய பாடல்கள்

தமிழ் இளைஞர்கழகம், அரிசிப்பாளையம், சேலம்.

# ஆசிரியருக்குக் கடிதம்

கிருத்துவ சிறுமலர்,
உயர்தரப்பள்ளி, சேலம்.
6-3-47

அன்புள்ள ஆசிரியர் அவர்களே'

சேலம் கிருத்துவ சிறுமலர் உயர்நிலைப்பள்ளியில் கல்வி பயிலும் திராவிடமாணவர்களாகிய நாங்கள் அன்றொருநாள் கருப்புச்சட்டை யணிந்து பள்ளிக்குச் சென்றபோது பள்ளி தலைமையாசிரியர் எங்களைக் கண்டு சீறி, "கருப்புடை யணிந்து வந்து பள்ளியில் கட்சி பேதத்தை உண்டாக்காதீர்கள்; கருப்புச்சட்டையை அணிந்து நீங்கள் பள்ளிக்கு வரக்கூடாது, மீறி கருப்புச்சட்டை யணிந்து வருவீர்களாயின் உங்களைப் பள்ளியிலிருந்து நீக்கி விடுவேன்' என்று கூறியதுமன்றி 'இப்பள்ளி யாவருக்கும் பொது; இதில் அரசியல் பேதம் கூடாது' என்றும் உரைத்தார்

ஆனால் 28-2-47ல் நடந்த பள்ளியின் ஆண்டுவிழாவையொட்டி பள்ளியில் மனோகரன் மணியென்ற நாடகம் நடைபெற்றது. அந்நாடகத்தின் கதைக்குச் சிறிதும் தொடர்பில்லாத ஒரு காட்சியைப் புகுத்தி "காந்தி மகான் வாழ்க!" "கொடியை சுழற்றி கதரை ஆதரிப்போம்" என்று கூறிக்கொண்டும், கதராடைகளையும், கதர் குல்லாய்களையும் அணிந்துகொண்டும் ஒரு சில மாணவர்கள் நடித்தார்கள். தலைமை ஆசிரியர் இவற்றிற்கெல்லாம் சம்மதித்தார் மேலும் தலைமையாசிரியர் கதர் மாலையணிந்து புகைப்படமும் எடுத்துக்கொண்டார்.

நாங்கள் கருப்புச்சட்டையணிந்து வகுப்புக்குச் சென்றபோது எங்களைக் கண்டித்து 'பள்ளி பொது, இதில் அரசியல் கூடாது' என்று கூறிய தலைமையாசிரியர் இப்பொழுது தம் பொறுப்பை இழந்து நடந்துகொண்டது வருந்தத்தக்கது. தலைமையாசிரியர் ஒரு கிருத்துவராயிருந்தும் இவ்வண்ணம் ஆரியர் சூழ்ச்சிக்கு அடிபணிந்திருப்பது மிகவும் வருந்தத்தக்கது.

மேலும் திராவிட மாணவர்களாகிய எங்களை இன்னும் அன்புறுத்தி வருந்த நேரா [illegible] தலைமையாசிரியர் [illegible].

இங்ஙனம்,
அழகராசு, திராவிட மாணவன்.

## திராவிடர் கழக நிதி அளிப்புக்கூட்டம்

17-3 47 திங்கள் மாலை 6 மணிக்குத் திருச்சி டவுன் ஹாலில் நடைபெறும்.

தலைவர்:
தி. பொ. வேதாசலம் B. A. B. L.,

சொற்பொழிவாளர்கள்:
பெரியார் ஈ. வே. ராமசாமி அவர்கள்
தோழர் இரா. நெடுஞ்செழியன் M. A., அவர்கள்

அனைவரும் வருக!

எ. சின்னதுரை, தலைவர்.
எம். நடராசன், ஆர். சுலைமான்,
செயலாளர்.
திருச்சி மாவட்ட திராவிடர் கழகம்.

## மணமகள் தேவை

நல்ல உயர்குடியிற் பிறந்தவரும் நன்கு படித்து தற்பொழுது கவர்ன்மெண்டு உத்தியோகத்திலிருக்கும் 25 வயதுடைய இந்துமதத்தைச் சார்ந்த வாலிபருக்கு 18 முதல் 20 வயதுடைய, நல்ல அழகுள்ள, ஹயர்கிரேட் படித்த, விவாகமாகாத மணமகள் தேவை. குறைந்தபட்சம் 8வது பாரமாவது படித்திருக்க வேண்டும். எம்மதத்தினரும் சம்மதமே. வரதட்சணைப் போக்குவரத்து இரகசிய மனமுறையில் வைக்கப்படும் விருப்பமுள்ளவர்கள் கீழ்க்கண்ட விலாசத்திற்கு விண்ணப்பித்துக்கொள்ளவும்.

M. C/o மானேஜர்,
குடி அரசு, ஈரோடு

## திருத்தம்

1-3-47 குடியரசு இதழ் 8ம் பக்கத்திலுள்ள மதிப்புரைப் பகுதியில் 'வெள்ளி' என்ற தலைப்பில், கிடைக்குமிடம்:-கமலா பிரசுராலயம் 59, பிராட்வே, சென்னை' என்றிருப்பதைச் 'செந்தமிழ்ப் பதிப்பகம், கீழராஜவீதி புதுக்கோட்டை' என்று திருத்தி வாசிக்க வேண்டுகிறோம்.

## ஆறாவது ஆண்டு நிறைவு விழா.

கல்லக்குடி தோழர் க. ம. துரைசாமி—காமாட்சி அவர்களின் செல்வி மணிமேகலையின் ஆறாவது ஆண்டு நிறைவு விழாவின் நினைவாகக் குடியரசு வளர்ச்சிக்கு 5 ரூபாய் நன்கொடையாக பாச்சூர் தோழர் வ. கணேசன் (கோவாலப்பூர்) அவர்களால் அளிக்கப்பட்டது.

## சோழவந்தானில் திராவிட மாணவர் கழகம்

சோழவந்தான் மாவட்ட உயர்நிலைப் பள்ளியில் திராவிட மாணவர் கழகம் தொடங்கப்பட்டு நிர்வாகக் குழு தேர்தல் கூட்டம் 3-3-47 ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு சோழவந்தான் வைகையாற்று மணலில் மதுரைக் கல்லூரித் தோழர் சி. நடசிவாயம் தலைமையில் நடைபெற்றது. 1947ம் ஆண்டிற்குக் கீழ்கண்டவர்கள் நிர்வாகக் குழுவினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:—

தலைவர்: சி. நடசிவாயம், உபதலைவர்: ம. வீரணன், செயலாளர் ச. தியாகராசன், மு காசிமாணிக்கம், பொருளாளர்: வெ. ஆவுடையப்பன், நிர்வாக உறுப்பினர்கள்: ச. குழந்தைவேலன், சு. எர்மநாயுடு, சு. மகாராசன், பா. கு சீனிவாசன், கா. இராமநாதன், சே. ஆண்டிப்பன்.


வெளிவந்துவிட்டது! இரண்டாம் பதிப்பு!

"தமிழகம் இழந்த தளபதி"

மறைந்த மன்னர் என். அர்ச்சுனன் அவர்கள் பிரிவு குறித்து எழுதிய நூல். விலை அணா 4.
வியாபாரிகட்கு 20% கமிஷன் தரப்படும். வேண்டுவோர் எழுதவும்.
தபாற்செலவு வேறு.

என். இ. பாலகுரு,
அர்ச்சுனன் நிலையம், பட்டக்காரர் பாளையம், ஈரோடு.

குடி அரசு

1947-ஆம் மார்ச்சு மீ 15உ.

## சந்தி சிரிக்கும் மந்திரி சபையும் திராவிட மக்களும்

சென்னை மாகாண மந்திரி சபையின் யோக்கியதையைக் கண்ட உண்மை திராவிடர் எவரும் வெட்கப்படாமல் இருக்க முடியாது. பச்சைத் தமிழ்ப் பழமொழிப்படிப் பேசவேண்டுமானால் "இந்த மானங்கெட்ட நீதிகெட்ட, நாணயங்கெட்ட, ஒழுக்கங்கெட்ட, சின்னப்பட்ட மந்திரிகள் ஆட்சியில் குடிமகனாய் வாழுவதைவிட நாக்கைப் பிடுங்கிக்கொண்டு சாவது மேல்" என்று சொல்லலாம்.

"காங்கரஸ் என்றால் ஒரு பொதுநலஸ்தாபனம்" என்ற சொல் மறைந்து காங்கரஸ் என்றால் ஒரு சுயநலஸ்தாபனம் என்றாகிவிட்டது.

"காங்கரஸ் என்றால் தியாகிகள் ஸ்தாபனம்" என்பது மறைந்து காங்கரஸ் என்றால் பட்டவேட்டை ஆடிப் பதவிக்காக மானங்கெட்டுச் சண்டித்தனம் செய்யும் ஸ்தாபனம் என்றாகிவிட்டது.

"காங்கரஸ் என்றால் சாதுக்கள் யோக்கியர்கள் ஸ்தாபனம்" என்பது அடியோடு மறைந்து காங்கரஸ் என்றால் காலிகள், யோக்கியப் பொறுப்பற்றவர்கள் ஸ்தாபனம்" என்று சொல்லும்படி ஆகிவிட்டது,

"காங்கரசுக்கு நாணயமும் ஒழுக்கமும் ஜீவநாடி" என்பது போய் காங்கரசுக்கு லஞ்சமும் பித்தலாட்டமும் ஜீவநாடி என்றாகிவிட்டது.

"காங்கரஸ் என்றால் சுயராஜ்யம் பிறப்புரிமை" என்பது போய் காங்கரஸ் என்றால் பார்ப்பனர்களின் (பொறுப்பற்ற) ராஜ்யம் பிறப்புரிமை என்றாகிவிட்டது.

"காங்கரஸ் என்றால் பொதுமக்கள் ஜனநாயகம்" என்பது போய் காங்கரஸ் என்றால் பார்ப்பனர் ஆரியர் சர்வாதிகார நாயகம் என்றாகிவிட்டது

"காங்கரஸ் என்றால் அஹிம்சை சத்தியம்" என்பதுபோய் காங்கரஸ் என்றால் குத்து வெட்டு, கொலை, கொள்ளை, அண்டப்புளுகு சபை என்றாகிவிட்டது.

"காங்கரஸ் என்றால் இந்து முஸ்லிம் ஒற்றுமை சபை" என்பது அடியோடு மறைந்து காங்கரஸ் என்றால் இந்துமுஸ்லிம் போராட்ட, கலக, கலவரசபை என்றாகிவிட்டது.

"காங்கரசென்றால் கட்டுப்பாடு ஒழுங்குமுறைஸ்தாபனம்" என்பது போய், காங்கரஸ் என்றால் கட்டுப்பாடும் ஒழுங்குமுறையுமற்ற ஒரு பழங்கால மீன்கடை, கள்ளுக்கடை, நாடு சிரிக்கும் தலைவிரிச்சான் சட்டசபை என்றாகிவிட்டது.

இப்படியாக இன்று அதன் சொந்த யோக்கியதை ஒருபுறமிருக்க அதன் பெயரால் ஆட்சி செலுத்துகிறவர்கள் "பார்ப்பான் பண்ணையம் கேட்பாரில்லை" என்பதுபோல் கண்டவன், நின்றவன், காலி, கூலி, போலி, போக்கிரி, கொடி தூக்கினவன்; ஜே போட்டவன் என்பன போன்ற ஆட்களாய், பட்டம்பகலில் பச்சைக் கொள்ளை அடிக்கும் கொள்ளைக்கூட்டத்தினர்களாக, அதிகாரிகளுக்கும் மந்திரிக்கும் லஞ்சம் வாங்கிக்கொடுக்கும் தரகர்களாக, கள்ள மார்க்கட், கொள்ளை வியாபாரிகளுக்குப் பர்மிட் ராஜாக்களுக்கு லைசென்சு வாங்கிக்கொடுக்கும் கமிஷன் ஏஜண்டுகளாக, தண்டிக்கப்பட்ட, கையும் களவுமாய்ப்பிடிக்கப்பட்ட அயோக்கியர்களுக்கு விடுதலையும் பாதுகாப்பும் அளிப்பதையே வாழ்வின் வியாபாரமாகக்கொண்ட சிகாமணிகளாக வாழ்கின்றார்கள்.

பொருளாதார, தொழில் முறைத் தத்துவத்தில் பஞ்சுக்கு இன்றைய பஜார் விலையும், முதலுக்கு 12 வட்டியும், தொழிலாளிக்குத் தினம் 2ரூபாய் கூலியும் கொடுத்து கணக்குப்பார்த்தால்கூட கஜம் ஒன்றுக்கு 0-8-0 அணாவுக்கு விற்கவேண்டிய துணி கண்ட்ரோல் வைத்து மாதம் 1000, 2000, 3000 சம்பளமுள்ள ஆட்களைக் கண்ட்ரோலர்களாக நியமித்து மாதம் லட்சக் கணக்கான ரூபாய் செலவில் பாதுகாப்பு அதிகாரிகள் சிப்பந்திகள் ஆகியவர்களை நியமித்தும் கஜம் 1-8-0, 2-0-0, 2 8-0 ரூபாக்கு விற்க அனுமதித்துக்கொண்டும் இருக்கவும், அதுவும் இடுப்பாறக் கட்டுவதற்கில்லாமல் பல்லைக்காட்டிக் கெஞ்சிக் கொண்டு திரியவும் நாட்டில் நல்ல மழை பெய்தும், நல்ல வெள்ளாமை ஏற்பட்டும் மக்கள் முக்கால் வயிறு அரை வயிறு பட்டினியும், கல், மண்ணு பூச்சிப்புழுவும் கலந்த அரிசலும், நாற்றமும் உள்ள அரிசியும் உணவு தானியமும் இந்த வியாபாரத்தில் நடுவிலுள்ள தரகர்கள் ஏராளக் கொள்ளையடிப்பதுமாய் இருக்கவும் சுருக்கமாகச் சொல்லவேண்டுமானால் எது அநீதி, எது அயோக்கியத்தனம், எது நாணயக்குறைவு என்று சொல்ல முடியாத நிலையில் எல்லாம் கேவலம், எல்லாம் இழிவு என்கின்ற தன்மையைக் காங்கரஸ் மக்கள் இன்று எய்திவிட்டனர், காங்கரஸ் ஆட்சியும் எய்திவிட்டது என்று சொன்னால் எவராலும் மறுக்கமுடியாத நிலைமையை எய்திவிட்டது.

இதுஎன்று மாறப்போகிறது? எப்படி மாறப்போகிறது? என்பதற்கு எவ்வித அறிகுறியையும் காணமுடியவில்லை. சுதந்தரம் வந்துவிட்டது அல்லது வரப்போகிறது என்கின்ற செய்தியைக் கூப்பாடுபோட்ட வாய் மூடுவதற்கு முன்னமே அடக்குமுறைச் சட்டங்கள், அயோக்கிய அதிகாரிகளின் அட்டூழியங்கள் தலைவிரித்து ஆடுகின்றன. எங்கும் 144 சட்டம், எங்கும் கைதி செய்யும் எதேச்சாதிகாரம், கேள்விகேட்பாடில்லாமல் மக்களைப்பிடித்து அடைப்பதும், காரணகாரியமல்லாமல் விடுதலை செய்வதும், காலித்தனம், கொலை, கொள்ளை, தீ வைத்தல், நாசம் செய்தல் ஆகிய காரியங்களைப்பற்றிக் கேள்விகேட்பாடில்லாமல் போனதோடு இவற்றிற்குத் தலைமைக் குண்டர்களாக இருந்தவர்களுக்குப் பதவி, கொள்ளை லாபம், மந்திரிவேலை முதலிய வினியோகங்கள் ஆகியவைகளும் நடைபெறுகின்றன. இந்த நிலையில் உள்ள ஆட்சியின்கீழ் ஒரு மனிதன் இருக்க நேர்ந்தால் இதைவிட மனவேதனையும் மானக்கேடும், வாழ்க்கைத் துன்பமும் உள்ள காரியம் வேறொன்று இருக்கமுடியுமா என்று கேட்கிறோம்.

இவ்வளவும் போதாமல் இனி எதிர்காலம் எப்படிப்பட்டதாக இருக்கிறது என்று சிந்திப்போமானால் குடிமக்கள் கைக்கு இராட்டினமும் உலக்கையுபரிசாக வழங்கப்பட்டதாக இருக்கிறது. அதாவது உணவுக்கு அவனவன் தானே உலக்கையால் நெல்லைக்குத்தி அரிசியாக்கிக் கொள்ளவேண்டும். உடைக்கு அவனவன் இராட்டினம் சுற்றி நூல் நூற்றுக் கொள்ளவேண்டும் என்கின்ற நிலையை எதிர்காலம் (ஏ[illegible] இன்றைய காலமே) எய்திவிட்டது.

வந்துவிட்ட அல்லது வரப்போகும் சுயராஜ்யத்தில் பொதுலட்சியம் என்பதாக ஒன்று இருப்பதாகவே சொல்ல, காண முடியவில்லை. முஸ்லிம்களுக்கு முஸ்லிம் இலட்சியம், பார்ப்பனருக்கு பார்ப்பன இலட்சியம், கிருஸ்தவர்களுக்கு கிருஸ்தவ இலட்சியம், ஷெடியூல்டு வகுப்பு மக்களுக்கு ஷெட்டியூல்டு வகுப்பு இலட்சியம் மற்றவர்களுக்கு அதாவது இவர்கள் நீங்கிய திராவிடர்களுக்கு எவ்வித இலட்சியமே இல்லை, நாதியே இல்லை, கேள்வி கேட்பாடே இல்லை என்பதல்லாமல் பலவிதத்திலும் பெரிதும் அல்லல்பட்டுத் தவிக்கும் மக்கள் இவர்களாகவே இருக்கிறார்கள். நாளைக்கு ராட்டினம் சுற்றுகிறவர்களும் நெல் குத்துபவர்களும் நாட்டின் பெரும்பான்மை மக்களாகிய இவர்களே ஆவார்கள். இவர்கள் நிலை இப்படி இருக்கிறது என்றால் உண்மையில் திராவிடர்களின் இன்றைய நிலையை என்ன என்று சொல்லவேண்டும்?

இந்த நிலையில் நிலையான மந்திரிசபை இல்லை. மந்திரிகளுக்குள் ஒற்றுமை இல்லை. பல இன உணர்ச்சி, பல வகுப்பு உணர்ச்சி, பல மத உணர்ச்சி, பல உள் ஜாதி உணர்ச்சி, பல கட்சி உணர்ச்சி என்ற தலைவிரிகோல ஆட்சி இருந்துவருகிறது.

இவ்வளவோடு நின்றதாக இல்லாமல் வடநாட்டாரின் ஆதிக்கம் அளவு கடந்து நிற்கிறது. எனவே மந்திரிகளின் நிலை மந்திரிசபை நிலை சிரிப்பாய் சிரிக்கக்கூடியதாய் இருந்தாலும் திராவிடநாட்டில் திராவிட மக்களின் நிலை மிகமிக பரிதாபத்திற்குரியதாயும் அழுவாரற்ற அனாதைப் பிணம் போன்றதாயும் இருந்துவருவதை இனியாவது நினைத்துப் பார்த்து ஒன்றுபட்டு ஒரு பொது இலட்சியத்தில் ஈடுபடமாட்டார்களா என்று ஆசைப்பட்டே இதை எழுதுகிறோம்.

காங்கரஸ் திராவிடத் தோழர்கள் இனியாவது சற்று மானத்தில் கவலை வைத்து பார்ப்பன ஆதிக்கமும், அவர்களது பொறுப்பற்ற, மானமற்ற, நீதி அற்ற, ஒழுக்கமற்ற, நாணயமற்ற ஆட்சிக்கு ஆளாகாமல் அதை அழிக்கவோ முடியாவிட்டால் அதிலிருந்து விலகவோ செய்வார்களா? என்று கேட்கிறோம்.

## நாங்கள் நாஸ்திகர்களா?

சென்னை கவர்னர் ஆர்ச்சிபால்ட் நை 12-3-47ல் திருப்பதி திருமலைக்குச் சென்று, ஆண்டு கோயில் கொண்டுள்ள சீநிவாசப் பெருமாளைத் தரிசனம் செய்த செய்தியையும், கோயிலில் உள்ள விலை மதிப்பிடமுடியாத ஆபரணங்கள் வாகனங்கள், தேர், வைரகிரீடம் முதலியவற்றைக் கவர்னர் கண்டுகளித்த செய்தியையும் விளக்கமாக 14-3-47ல் வெளியான சுதேசமித்திரன் பத்திரிகையின் இரண்டாம் பக்கத்தில் தீட்டப்பட்டுள்ளன.

மகாராஷ்டிர மன்னர், மைசூர் மகாராஜா, பொப்லி ராஜா, வெங்கடகிரி ராஜா முதலிய (சுதேச சமஸ்தான) மன்னர்கள் திருப்பதி மலையில் கோயில் கொண்டுள்ள சீநிவாசப் பெருமாளுக்கு அளித்த விலையுயர்ந்த மகரகண்டி, ஆபரணங்கள், நகைகள் முதலியவற்றைக் கண்ணுற்றாராம் கவர்னர் பெருமான். இவ்விலையுயர்ந்த ஆபரணங்கள் எப்படிச் சமஸ்தான மன்னர்களுக்குக் கிடைத்தனர்? இம்மன்னர்கள் மக்-

களைக் கொடுங்கோலாட்சிக்குட்படுத்தி அவர்களிடம் கொள்ளையடிக்கும் பொருள்களாலன்றோ இவ்வாபரணங்கள் செய்யப்பட்டன? கொள்ளையடிக்கும் கொடுஞ்செயல் ஆண்டவனுக்கு ஆபரணங்கள் அணிவித்தால் மறைந்துவிடும் என்பதும் ஆண்டவனும் மறந்துவிடுவான் என்பதுந்தானே இவர்கள் கருத்து?

ஒருமுழமோ அல்லது இரண்டு முழமோ உள்ள ஓர் சிலைக்கு 140000 ரூபாய் செலவில் வெள்ளித்தேராம்! என்ன அநியாயம்! நாட்டிலே பாட்டாளி மக்கள் பாதரட்சை அணிவதற்கும் வகையின்றி வறுமையால் வாடும் இக்காலத்தில் பரந்தாமனுக்கு இலட்சக்கணக்கான ரூபாய் செலவில் வெள்ளித்தேராம்! இதைக் கேட்பாரில்லையா? கேட்டால் குற்றமா? ஆட்சி செலுத்துபவர்கள் இதில் ஏன் அக்கரை செலுத்தவில்லை?

ஆண்டவன் பேராசைக்காரனா? பாட்டாளி மக்கள் படுதுயரத்தில் பதைபதைத்துக்கொண்டிருக்கையில் பல்லாயிரக் கணக்கான ரூபாய் செலவில் செய்யப்பட்ட தேரில் பவனி வர பரந்தாமன் விரும்பினானா? விரும்பினால் உலகை உய்விக்க வந்த உத்தமக் கடவுள் அவன் என்று எப்படி எண்ணுவது?

1100 தோலா (ரூபாய்) எடையுள்ள தங்கம் கொண்டதும், 12 இலட்ச ரூபாய் பெறுமானமுள்ள நவரத்தினங்களால் செய்யப்பட்டதும் விழாக் காலங்களில் மூலபெருமாளுக்குச் சாத்தப்படுவதுமான வைர கிரீடத்தைக் கவர்னர் கண்டுமட்டற்ற மகிழ்ச்சிகொண்டாராம்! 21 காரட்டுகளும், 18 காரட்டுகளும் கொண்ட இரு வைரங்களும், ஒவ்வொன்றும் ஒரு இலட்ச ரூபாய் விலைபெறும்படியான ஐந்து பச்சைக் கற்களும், மற்றும் அநேக இரத்தினங்களும் அக்கிரீடத்தின் முன் புறத்தில் பதிக்கப் பட்டுள்ளனவாம்! நவமணிகளும் கிரீடத்தில் மிளிர்கின்றனவாம்! கிரீடத்தின் முன்பக்கம் கற்களாற் செய்யப்பட்டபின்னர் அதன் கனம் தூக்க முடியாமற் போகவே பின்பக்கத்தையும் கற்களாற் செய்யும் முடிவு கைவிடப்பட்டதாம்! இவ்வுண்மையைக் கமிஷனர் ஜெயராம் கவர்னருக்குணர்த்தினாராம்!

12 இலட்ச ரூபாய் செலவில் செய்யப்பட்ட கிரீடம் கடவுளுக்குத் தேவையா? அக்கடவுளுக்கு உண்மையில் உயிரிருக்குமானால் தன் தலையில் அவ்வளவு கனமுள்ள அக்கிரீடத்தை தாங்கிக்கொண்டிருக்க முடியுமா? தாங்கிவைக்க முடியவில்லையென்ற காரணத்தாலன்றோ கிரீடத்தின் பின்புறத்தில் நவமணிகள் பதிக்கப்படவில்லை என்று கூறப்படுகின்றது! உண்மையிலேயே பெருமாள் தன் தலையில் அக்கிரீடத்தை அணிந்துகொள்ள விரும்பியிருப்பாரேயானால் அக்கிரீடத்தைத் தாங்கிவைக்கும் ஆற்றலை அதைச் செய்தோருக்குக் கொடுத்து அதன் பின்புறத்திலும் நவமணிகளைப் பதியவைக்கச்செய்திருப்பாரே! அவர்தான் எல்லாம் வல்லவர் என்று கூறப்படுகின்றதே! பின்னர் ஏன் அவ்வாற்றலை அவர் அளிக்கவில்லை! உண்மையிலேயே சிலைக்கு உயிரிருந்தாற்தானே! எப்படி உயிர் இருக்க முடியும்? பின்னர் எதற்காகப் பெருமாளுக்குப் பெருஞ் செலவில் கிரீடம்? கிரீடத்தைக் காட்டிப் பாமரர்களைப் பார்ப்பனர்கள் எய்த்துப் பணம்பறிக்கவன்றோ அக்கிரீடம் தயார் செய்யப்பட்டுள்ளது? இதைக் கூறினால் குற்றமா? குற்றமாயின் அப்பெருமாளே எம்மை உடனே அழித்துவிடட்டுமே பார்ப்போம்!

மற்றும் ஆண்டொன்றுக்கு 32 இலட்ச ரூபாய் திருமலை கோயிலுக்கு— ஏழுமலையானுக்கு வருவாய் வருகிறதென்று சர்வோபதி கவர்னரிடம் பெருமையாய்க் கூறினாராம்! போர்க் காலத்தில் நாள் ஒன்றுக்கு 12000 ரூபாய் காணிக்கை வருமானம் வந்ததாம்! நாள்தோறும் 2500 பேர்களும், விழாக் காலங்களில் நாள் ஒன்றுக்குச் சுமார் 20000 யாத்ரீகர்களும் பெருமாளைத் தரிசிக்க வருவாராம்!

இவர்கள் கோயிலுக்குச் செலுத்தும் காணிக்கைதான் ஆண்டொன்றுக்கு வருமானமாய் வரும் 32 இலட்ச ரூபாயும்! யுத்தகாலத்தில் நாள் ஒன்றுக்கு 12000 ரூபாய் வரும்படியாம்! இவைதவிர யாத்ரீகர்கள் செலவு ஒரு கோடி ரூபாயாவது இருக்கலாம். கள்ள மார்க்கட்டில் வியாபாரம் செய்து இலட்சக்கணக்கில் கொள்ளையடித்த மக்கள் நாள் ஒன்றுக்கு 12000 ரூபாய் திருப்பதி கோயிலுக்குக் காணிக்கை செலுத்தியதில் நமக்கு வியப்பில்லை. திருப்பதி கோயிலுக்கு மாத்திரம் 12000 ரூபாய் என்றால் ஏனைய கோயில்களுக்கு எத்தனை ஆயிரமோ?

இப்பொருள்கள் யாவும் யார் நன்மைக்குப் பயன்படுத்தப் படுகின்றன? இவற்றைச் செலவு செய்ததற்குக் கணக்கு எங்கே! பொதுமக்களால்தானே இப்பொருள்கள் கோயில்களில் குவிக்கப்படுகின்றன? இவற்றை ஏன் பொதுமக்கள் நன்மைக்காகப் பயன் படுத்தக்கூடாது? பயன் படுத்தினால் சுவாமி கண்ணைக் குத்திவிடுவாரா? இப்பொருள் யாவும் கோயிலிலே உயிருள்ள சுவாமிகளாக நடமாடும் பார்ப்பனர்களின் உந்தி வளர்ப்புக்

குத்தானே பயன்படுகின்றன? இவ்வுண்மையை யாராவது மறுக்கமுடியுமா? இவற்றைப் பற்றிக் கேட்பாரில்லையே!

ஆட்சி செலுத்துகிறவர்கள் ஏன் இதில் அக்கறை செலுத்தவில்லை? இதுவரையில் வெள்ளையன் ஆண்டான். அவன் இந்தியர்களுக்குச் செய்துகொடுத்த ஒப்பந்தத்தின்படிக் கோயில் விவகாரங்களில் தலையிடக்கூடாது. ஆனால் இப்போது நாட்டின் நன்மையையே நாட்டமாகக் கொண்டுள்ள காங்கரஸ்காரர்களாலல்லவா நாடு ஆளப்படுவதாகப் பேசப்படுகின்றது? அவர்கள் ஏன் இப்பொருள்களைப் பொதுமக்கள் நன்மைக்குப் பயன்படுத்தக்கூடாது? அப்பணியில் ஈடுபட்டால் பரந்தாமனின் கோபத்திற்கு ஆளாகவேண்டுமென்ற அச்சமா? அல்லது பார்ப்பனர்களின்மேல் வைத்த வாஞ்சையால் அக்கரைசெலுத்தவில்லை? ஆம், ஆளவந்தார்கள் இதைப்பற்றி அக்கரை காட்டமாட்டார்கள். அவர்கள்தான் ஆரியர்களுக், அவர்களின் அடிவருடிகளுமாயிற்றே! அவர்கள் இனத்திற்குக் கேடுபயக்கும் செயலில் இறங்குவார்களா? இறங்கினால் இனத்துரோகமன்றோ!

மலைமீது ஏதாவது சாகுபடி செய்யப்படுகின்றதா என்று கவர்னர் பெருமான் கேட்டாராம்! ஏழு மலையும் ஆதிசேஷனாயும் சீநிவாசப்பெருமான் அதன்மீது நிற்பதாயும் கருதப்படுகின்றதாம். ஆகையால் கலப்பைகொண்டு திருமலையில் உழுவதில்லையாம். இதைக் கமிஷனர் கவர்னருக்குக் கூறினாராம்!

என்னே! இப்பார்ப்பனர்களின் புரட்டுவித்தை! மலைமீது மக்கள் ஏறுகிறார்களே! மநுநூல்படி நீசர்கள் என்று கருதப்படும் வெள்ளையரான கவர்னர் அதன்மீது நடந்து சென்றாரே? மநுநூல்படிக் கடைச் சாதியார் என்று சொல்லப்படும் தாழ்த்தப்பட்டவர்கள் அம்மலைமீது செல்லப் போகிறார்களே! நீசனும், தாழ்த்தப்பட்டவனும் மலைமீது சென்றால் அவர்கள் ஆதிசேஷனை மிதித்தவர்களாகின்றனரே! இதைமாத்திரம் ஆதிசேஷனும், பெருமாளும் பொறுத்துக் கொள்வார்களோ? கலப்பையைக்கொண்டு உழுவதை மாத்திரம் பொறுத்துக்கொள்ள மாட்டார்கள் போலும்!

நாட்டிலே 100க்கு 90 பேர் தற்குறிகள்! பாமரமக்கள்! ஏழைகள்! பாட்டாளிமக்கள்! இவர்கள் அனைவரும் வறுமையால் வாடுகின்றனர். இவர்களின் குறைகளைப் போக்க ஆளில்லை.

ஆனால் பரந்தாமனின் பெயரால் பலகோடி ரூபாய்கள் நாசம். ஏன் என்று கேட்பாரில்லை. இப்பொருள்கள் யாவும் பாமர மக்களின் நலத்திற்குப் பயன்படுத்தப்பட்டால் பரந்தாமன் சீற்றங்கொள்வாரா? இப்பொருள்களைக் கொண்டு அறிவை வளர்க்கும் கல்விச்சாலைகளும், நாட்டு வளர்ச்சிக்குத் தேவையான தொழிற்சாலைகளும் ஏன் கட்டக்கூடாது?

மக்களை அறிவிலிகளாயாக்கும் கோயில்களில் நடைபெறும் அக்கிரமங்களை அப்படியே விட்டுவிட்டு கள்ளுக்கடையை எடுத்து என்ன பயன்? கள்ளுக்கடைக்குக் கொட்டப்படும் பணம் இப்போது கோயில்களுக்கல்லவோ போய்ச்சேரும்? கோயில்களைத் தாழ்த்தப்பட்டவர்களுக்குத் திறந்துவிட்டுதான் என்ன பயன்? இப்போது ஆண்டு ஒன்றுக்கு 32 இலட்ச ரூபாய் வருமானமென்றால் இனிமேல் குறைந்தது 40-

## தமிழ் சித்தவைத்திய மாநாட்டின் வரவேற்புக் கமிட்டியின் 3வது கூட்டம்

மேற்படி கூட்டம் 9-3-47ல் திருச்சியில் அகில இந்திய திருவிதாங்கூர் சித்தவைத்திய சங்கத்தின் தலைவர் தோழர் நித்தியானந்த அடிகளின் தலைமையில் கூடி மார்ச்சுமாதம் 29, 30ந் தேதிகளில் நடக்கவிருந்த சித்தவைத்திய மாநாட்டை மேமாதத்திற்கு ஒத்திப்போடுவதாக முடிவு செய்தது.

---

இலட்ச ரூபாய் வருமானமாவது ஏழாமலையானுக்குக் கிடைக்கும்! இதனால் யாருக்கு இலாபம்? கோயிற் பூனைகளாகிய பார்ப்பனர்களுக்குத்தான் என்பதைக் கூறவும் வேண்டுமோ?

கோயில், கடவுள் ஆகியவற்றின் பெயரால் பொருள்கள் அழிக்கப்படுகின்றனவே என்று கூறினால் நாங்கள் நாஸ்திகர்களா? குழவிக்கல், மரத்தலைப் பொம்மை, வெள்ளிச்சிலை, தங்க உருவம் ஆகியவைகளைக் காட்டிப்பாமரர்களை ஏய்த்துக் கோடிக்கணக்கில் பொருளைக் குவித்து (மகிழ்ச்சி மிகுதியால்) கொம்மாளமடிக்கின்றனரே பார்ப்பனர்! அவர்கள் மாத்திரம் ஆஸ்திகர்கள்! என்ன நியாயம்? இதைச் சிந்திக்க நாட்டில் நாதியில்லையா? கேட்க ஆளில்லையா?

இதை நாங்கள் ஏன் கூறுகிறோம்? ஒரு கூட்டத்தார்மேல் தனிப்பட்ட முறையில் எங்களுக்கு வெறுப்பா? இல்லவே இல்லை. எல்லோரும் இன்புற்று வாழவேண்டுமென்பதற்குத்தான் இதை நாங்கள் கூறுகிறோம். அதற்குத்தான், சொல்லடிக்கும் கல்லடிக்கும் அஞ்சாது அரும்பணியாற்றி வருகின்றோம், இறுதியில் வெற்றி காணலாம் என்ற உறுதியுடன்.

(2ம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்பட்டு வந்தது. இந்தக் கொடிய போராட்டத்தால் சில தேசிய விவகாரங்கள் கவனிக்கப்படவில்லை. எதிர்வாதம் செய்வதில், அதுவரை வெளியாகாதிருந்த முறைகள், தந்திரங்கள் அப்பொழுதுதான் வெளியாயின. மார்க்ஸ் தாம் ஒப்புக்கொண்ட கொள்கைகளைப்பற்றி அதிகமாகவில்லை. அவர் எதிர்க்கும் கொள்கைகளைப்பற்றி அங்கமாக விளக்கவில்லை. அவர் எதிர்க்கும் முறைகளைத்தான் விரிவாக விளக்கினார். இந்த முறைகளைத் தொடர்ச்சியாகக் கண்ணுற்ற கட்சியிலிருந்த பெரும்பாலோர் மனம் திரும்பினர்.

பாகுனினும் தமது பிடிவாதத்தை விட்டொழித்தார். "மார்க்சே நமது தலைவர்" என்றும் சொல்லலானார் தாம் மார்க்சின் சிஷ்யன் என்று கூறிக்கொண்டார். மார்க்ஸ் எழுதின கேபிடலை ரஷ்ய பாஷையில் மொழிபெயர்க்க முயன்றார். ஆனால் முயற்சி பலிக்கவில்லை. அவரிடத்தில் ஆக்கவேலைக்கான எண்ணம் மிகக்குறைவு. அவர் பொதுவுடைமையையும் நாஸ்திகத்தையும் பிரசாரம் செய்துவந்தார். அவரிடத்தில் அழிவு வேலைக்கான திட்டங்கள்தான் காண முடியும். புரட்சியின் நோக்கமே அரசாங்கத்தைக் கவிழ்த்து, ராணுவ ஆட்சியை, பலாத்கார ஆட்சியை அழித்துவிடவேண்டும் என பிரசாரம் செய்யவேண்டும் என விரும்பினார். அப்படிச் செய்தால்தான் அராஜகவாதி கம்யூனிசம் தோன்றும் என்றும், முதலாளி தத்துவத்தை அழிக்க முடியும் என்றும் கருதினார். பாகுனின், ஸ்பர்ஜியோ ஆகியவர்களைப் போன்ற தீவிரப் பேர்வழிகள் எப்படி உயிர் துறந்தனர் என்றுகூட நினைக்கக்கூடும். அவிந்துபோன எரிமலையைப்போல் இன்றும் அவர்களது காரியங்கள் மக்களது கண்களுக்குப் புலப்பட்டு வருகின்றன. ஸ்பர்ஜியோனின் பிரசங்கங்களை வாசிக்கிறவர்கள் ஏன் அக்காலில் அவர்கள் அவ்வளவு தீவிரமாக நடந்துகொண்டார் என நினைக்கக் கூடும். பாகுனின் புத்தகங்களை வாசிக்கும் ஒருவர், மூளை பலம் பொருந்திய மார்க்சையே எதிர்க்க இவருக்கு எப்படிச் செல்வாக்கு இருந்தது என்று சந்தேகிக்கக்கூடும். அவரது சக்தி, அவரது தோற்றத்திலே இருந்தது. அவரை ரஷியனென்ற [illegible] சொல்லவேண்டும். அவரது ஆர்வம் அளவிடமுடியாது. உள்ளத்தை யூட்டக்கூடிய வார்த்தைகள் சரமாரியாக அவரது வாயிலிருந்துவந்தன. உணர்ச்சி ததும்ப ஆண்மையுடன் சொற்பொழிவாற்றிவந்தார். ஸ்தாபனத்தை நிறுவுவதில் அவர் திறமைசாலி. அவரது கோட்பாடுகள் நிச்சயமற்றதாயிருந்தாலும் அவர் அதை வெற்றிபெற முடிப்பதில் எடுத்துக்கொண்ட வைராக்கியம் மெச்சத்தகுந்தது.

ஸ்தாபனங்கள் நிறுவுவதில் இவரிடம் சிறந்த கொள்கைகள் இருந்தன. அந்தக்கொள்கைகளுக்கும் அவரது பொதுவான கொள்கைகளுக்கும் முரண்பாடுகள் பல இருந்தன. ஆனால் நடைமுறையில் அவைகள் காணப்படவில்லை. அவைகள்: ஒன்று, புரட்சி முடிந்ததும் அரசாங்கம் அழிக்கப்படவேண்டும். இரண்டாவது, நாம் மனச்சாட்சியற்ற எதிரிகளை எதிர்த்து வருகிறோமாதலால் கொலைசெய்வது, கொள்ளையடிப்பது ஆகிய சகல முறைகளையும் கைக்கொள்ளவேண்டும். இதை நாம் கைக்கொள்ளத் தயங்கினால், நமது எதிரிகளின் கொள்கைகளை ஒப்புக்கொண்டவர்களாவோம். மூன்றாவது, ஒரு புதிய சமூகத்தைத் தோற்றுவிப்பதற்கு உயர்ந்தலட்சியத்தைக்கொண்ட ஒழுக்கமுடையவர்களால் போராடவேண்டும். அவர்கள் இந்த லட்சியத்திற்காக எதையும் தியாகம் செய்யத் தயாராயிருக்கவேண்டும். எதிர்பேசாமல் கண்மூடித்தனமாக இட்ட கட்டளைகளைப் பின்பற்றவேண்டும். எக்காரணத்தைக் கொண்டும் பின்னடைதல் கூடாது. தங்களுடைய நோக்கத்துக்குச் சாதகமான எவரையும் தம்மோடு சேர்த்துக்கொள்ளவேண்டும். பிரசாரத்தில் தேர்ச்சியுள்ளவர்களாயிருத்தல் வேண்டும். ஓட்டுச் சேகரிப்பதில், எதிரிகளை ஏய்ப்பதில், உருமாறிச் செல்வதில், அரசியல் அமைப்பதில் சமர்த்தர்களாயிருக்கவேண்டும். இதில் முதல் இரண்டு கோட்பாடுகள் மார்க்ஸுக்கும் ஏஞ்சல்ஸுக்கும் முரணாயிருந்தன.

[தொடரும்]

## திராவிட நாடு பகுத்தறிவு நிலையம்

23-2-47 ஞாயிறு பகல் 2மணிக்கு பம்பாயைச் சார்ந்த தாராவியில் "திராவிட நாடு பகுத்தறிவு நிலையத்தின்" 4வது ஆண்டு 1வது மாதாந்திரக் கூட்டம் தோழர் எஸ். டி. சவரிதாசன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் பம்பாய் கவர்ன்மெண்ட் கிரைன் ஷாப் கண்ட்ரோலரின் கடிதம் படித்துக் காட்டப்பட்டன. தலைவர் தோழர் எஸ். பி. சுந்தரவேல் அவர்களின் குழந்தை அன்னபூரணி இயற்கை எய்தினமைக்குக் கூட்டத்தில் அநுதாபம் கூறிக்கொள்ளப்பட்டது.

Edited, Printed, and Published by N Karivaradaswamy at the Tamilian Press, 42, Cutcherystreet, ERODE,